கருக்கம்

அறிவிப்புகள் – மானிய கோரிக்கை எண்.42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களின் அறிவிப்பு – புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் – ஊராட்சி நிர்வாகம் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் தொடர்பான பயிற்சி அளித்தல் – அனுமதி – ஆணை – வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண். 338 நாள்: 28.06.2012

படிக்கப்பட்டவை:

1. மாநில ஊரக வளர்ச்சி நிறுவன இயக்குநர் க்.எண்.2567/ A2/12, நாள் 24.4.2012 மற்றும் 15.5.2012
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.31917/2012/பயிற்சி, நாள் 26.4.2012 மற்றும் 23.5.2012.

* * * * *

ஆணை:

மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்கள் 9.4.2012 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கான மான்ய கோரிக்கை எண்.42ன் மீதான விவாதத்தின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் அறிவிப்பு எண்.4–ல் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் ஊராட்சி நிர்வாகம் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் ஆகியவை குறித்து பயிற்சிகள் அளிக்கவும், இதற்கென 10.71கோடி ரூபாய் 2012–13ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

2. மேற்படி அறிவிப்பு தொடர்பாக, மாநில ஊரக வளர்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் ரூபாய். 10.71 கோடி செலவில் ஊராட்சி நிர்வாகம் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் ஆகியவை குறித்து பயிற்சிகள் அளிக்க மாநில ஊரக வளர்ச்சி நிறுவன இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

என்.எஸ். பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
சென்னை 15.

இயக்குநர்,
மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்,
மறைமலைநகர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
இயக்குநர் (பயிற்சிகள்),
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கம்,
சென்னை–15.

<u>நகல்</u>
நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி), சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (வ,செ (ம)9) துறை,
சென்னை–9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.